# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

# TNPSC

## GROUP 2 AND GROUP 4

## Special

TNPSC

By ANANDHAVELAN G.

# தமிழ்

SINCE 2013
We Shine Academy
Guiding you to get through
TNUSRB | TRB | TET | SSC | BANK

'உண்பது நாழி உடுப்பவை இரண்டே'- என்று பாடிய புறநானூற்றுப் புலவர்

(A) மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

(B) கணியன் பூங்குன்றனார்

(C) நரிவெரூஉத் தலையார்

(D) ஔவையார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

உலகம் முழுவதையும் ஆலிக்கருதுபவர் எதற்காகக் காத்திருக்க வேண்டும்?

(A) படை வரும் வரை
(B) காலம் வரும் வரை
(C) பணம் வரும் வரை
(D) பலம் வரும் வரை

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

சீறாப்புராணத்தை இயற்றியவர் யார்?

(A) உமறுப்புலவர்

(B) சீதக்காதி

(C) அபுல்காசிம்

(D) திருநாவுக்கரசர்

SINCE 2013 We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

பொருத்துக :

| | | |
|---|---|---|
| (a) காகம் | - | 1. கூவும் |
| (b) குதிரை | - | 2. கரையும் |
| (c) சிங்கம் | - | 3. கனைக்கும் |
| (d) குயில் | - | 4. முழங்கும் |

(A) 1 3 4 2 (B) 4 3 1 2 (C) 2 4 1 3 (D) 2 3 4 1

'மூலன்' என்னும் இயற்பெயரை உடையவர்

(A) திருமூலர்
(B) அப்பர்
(C) சாத்தனார்
(D) தாயுமானவர்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

"ஒரு நாடு வளமுடன் இருக்க வேண்டுமானால், அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருக்க வேண்டும்" - எனக் கூறியவர் யார்?

(A) பாரதியார் (B) அம்பேத்கார்

(C) பெரியார் (D) அறிஞர் அண்ணா

இந்திய நாட்டை, 'மொழிகளின் காட்சிச் சாலை' என்று கூறியவர்

(A) குமரிலபட்டர்

(B) கால்டுவெல்

(C) ச. அகத்தியலிங்கம்

(D) ஈராஸ் பாதிரியார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

'நவ்வி' - இச்சொல்லின் பொருளை எழுதுக.

(A) மான் (B) நாய் (C) புலி (D) பசு

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

"சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை" எனக் கூறியவர்

(A) காந்தியடிகள்

(B) பாரதியார்

(C) பசும்பொன் முத்துராமலிங்கர்

(D) பாரதிதாசன்

We Shine Academy SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

குளிர்பதனப் பெட்டியில் பயன்படுத்தப்படுவது

(A) கார்பன் டை ஆக்சைடு (B) ஆக்சிஜன்

(C) குளோரோஃபுளுரோ கார்பன் (D) மீத்தேன்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

'தமிழ் பிறமொழித் துணையின்றி தனித்து இயங்குவது மட்டுமின்றித் தழைத்தோங்கவும் செய்யும்' - எனக் கூறியவர்

(A) டாக்டர் கிரௌல்

(B) கால்டுவெல்

(C) வீரமாமுனிவர்

(D) ஜி.யு. போப்

www.weshineacademy.com

8939 144 344 | 8939 244 344

'தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப் படுத்த வல்லது. தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவுமானால் தவிரத் தமிழுக்கு எதிர்காலம் இல்லை என நம்பு' – இக்கடிதப் பகுதி யாருடையது?

(A) திரு.வி. கலியாண சுந்தரனார்

(B) மு. வரதராசனார்

(C) பேரறிஞர் அண்ணா

(D) ஜவஹர்லால் நேரு

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

"தேசியம் காத்த செம்மல், எனத் திரு.வி. கல்யாண சுந்தரனாரால் பாராட்டப்பெறுபவர்".

(A) அம்பேத்கர்

(B) அண்ணா

(C) முத்துராமலிங்கர்

(D) பெரியார்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

காமராசரின் அரசியல் குரு

(A) காந்தியடிகள்
(B) பேரறிஞர் அண்ணா
(C) நேரு
(D) சத்திய மூர்த்தி

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

"பாவலரேறு பெருஞ்சித்திரனார்" எழுதாத நூல் எது?

(A) பாவியக் கொத்து

(B) பள்ளிப் பறவைகள்

(C) கொய்யாக் கனி

(D) குறிஞ்சித் திட்டு

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

தமிழ் இலக்கணம் படிக்க படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்று கூறியவர்

(A) அம்பேத்கர் (B) கெல்லட்

(C) கமில்சுவலபில் (D) முனைவர் எமினோ

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

ஒவ்வொருவரும் தாம் சிறந்ததாகக் கருதும் சமயத்தை கைக் கொண்டு வாழவிடுவதே தருமம்" – எனக் கூறியவர்

(A) இராணி மங்கம்மாள்

(B) அஞ்சலையம்மாள்

(C) வள்ளியம்மை

(D) வேலுநாச்சியார்

உன் மானத்தை விட நாட்டின் மானம் பெரியது என்று உணர். உன் உயர்வை விட, நாட்டின் உயர்வு இன்றியமையாது என்று உணர். உன் நலத்தை விட நாட்டின் நலம் சிறந்தது என்று உணர். நெருக்கடி நேரும் போது உன் நலம், உயர்வு, மானம் ஆகியவற்றை நாட்டுக்காக விட்டுக்கொடு – இக்கூற்று யாருடைய கடிதப் பகுதி?

(A) பேரறிஞர் அண்ணா (B) அன்னை இந்திராகாந்தி

(C) மு. வரதராசனார் (D) திரு.வி.க.

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

சாதுவன் வாணிகம் செய்யும் பொருட்டுக் கடல் கடந்து சென்ற குறிப்பு எந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) சிலப்பதிகாரம்
(B) மணிமேகலை
(C) குண்டலகேசி
(D) வளையாபதி

We Shine Academy SINCE 2013 TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM Guiding you to get through

பொருத்துக :

(a) திருவரங்கம் - 1. சிதம்பரம்
(b) திருச்சிற்றம்பலம் - 2. ஸ்ரீரங்கம்
(c) திருமறைக்காடு - 3. மீனாட்சி
(d) அங்கயற்கண்ணி - 4. வேதாரணியம்

(A) 1 3 4 2 (B) 2 1 4 3 (C) 3 2 4 1 (D) 1 4 2 3

மதுரையில் உலகத் தமிழ் மாநாடு எந்த ஆண்டு நடைபெற்றது?

(A) 1981 (B) 1982 (C) 1983 (D) 1985

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

நான் நிரந்தரமானவன் அழிவதில்லை
எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை.
– எனக் கவிதை பாடியவர்.

(A) சுரதா
(B) கண்ணதாசன்
(C) பாரதிதாசன்
(D) மு. மேத்தா

எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும். – எனப் பாடியவர்.

(A) பாரதிதாசன்
(B) பாரதியார்
(C) சுரதா
(D) கண்ணதாசன்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

மரக்கலத்தை குறிக்கும் நான்கு சொற்களை தேர்ந்தெடுக்க

(A) கலம், தோணி, புணரி, மிதவை

(B) கலம், பரிசில், ஓடம், பரவை

(C) கலம், வங்கம், புணை, அம்பி

(D) கலம், பரிசில், ஆழி, படகு

பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களைப் பொருத்துக :

(a) மீனாட்சி - 1. அங்கயற்கண்ணி
(b) மதுரவசனி - 2. வாள்நெடுங்கண்ணி
(c) கட்கநேத்ரி - 3. நீள்நெடுங்கண்ணி
(d) விசாலாட்சி - 4. தேன்மொழிப்பாவை

(A) 1 4 3 2 (B) 1 4 2 3 (C) 1 3 4 2 (D) 1 2 4 3

பிழையற்றத் தொடரைத் தேர்வு செய்க.

(A) ஒர் மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவருடை மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

(B) ஒரு மாவட்டத்தில் ஓர் அமைச்சர் அவருடைய மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

(C) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

(D) ஒரு மாவட்டத்தில் ஒரு அமைச்சர் அவரது மகனோடு சுற்றுலா மேற்கொண்டார்

"மாகதம்" எனப்படுவது

(A) மதுரகவி (B) சித்திரகவி

(C) வித்தாரகவி (D) ஆசுகவி

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

அகத்திணையின் வகைகள்

(A) ஐந்து (B) ஆறு (C) மூன்று (D) ஏழு

We Shine Academy® SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

கரணத்தேர் --------- எனப் பிரியும்.

(A) கரணம் + தேர்

(B) கரணத்து + ஏர்

(C) கரன் + அத்து + ஏர்

(D) காரணம் + தேர்

www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344

மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

(A) இல்லாரை எள்ளுவர் செல்வரை எல்லாரும்

(B) இல்லாரை செல்வரை எல்லாரும் எள்ளுவர்

(C) இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை

(D) செல்வரை எல்லாரும் எள்ளுவர் இல்லாரை

We Shine Academy® Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM

மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக

(A) குணநலம் நலனே சான்றோர் பிறநலம்

(B) சான்றோர் நலனே குணநலம் பிறநலம்

(C) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்

(D) சான்றோர் குணநலம் நலனே பிறநலம்

பகுபதத்தில் குறைந்தளவு இருக்க வேண்டிய உறுப்புகள்

(A) பகுதி, சந்தி

(B) இடைநிலை, சாரியை

(C) பகுதி, விகுதி

(D) விகுதி, சாரியை

உறவேனில் – இலக்கணக் குறிப்பு யாது?

(A) வினைத்தொகை

(B) உரிச்சொற்றொடர்

(C) பண்புத்தொகை

(D) வினையெச்சம்

www.weshineacademy.com

8939 144 344 | 8939 244 344

"இறை, செப்பு" என்பன கீழ்க்கண்ட எச்சொல்லுக்கு வழங்கும் வேறுபெயர்கள்

(A) வினா (B) மொழி (C) விடை (D) இறைவன்

www.weshineacademy.com 8939 144 344 | 8939 244 344

கீழ்க்காணும் தொடரில் சரியான விடையை தேர்வு செய்க.

(A) யானையின் கண் சிறியது

(B) யானையின் கண்கள் சிறியது

(C) யானையின் கண்கள் சிறியன

(D) யானையின் கண் சிறியன

We Shine Academy® SINCE 2013 Guiding you to get through TNPSC | TNUSRB | TRB | TET | SSC | BANK EXAM




www.weshineacademy.com
8939 144 344 | 8939 244 344